# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

**No.46B] CHENNAI WEDNESDAY, NOVEMBER 26,2008**

**Karhigai 11, Thiruvalluvar Aandu-2039**


## Part VI --- Section 2

(Supplement)

NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிக்கை எண். த.மி.ஒ.ஆ / DC / 8–9 , 22. 05. 2008 நாளிட்டது)**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 43 (1)ஆம் பிரிவுடன் இணங்கியிருக்க வேண்டிய தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளைச் செயற்படுத்துவது பொறுத்து ஒரு சில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு மேற்சொன்ன விதித்தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளுக்குத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைப் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கத்திற்காக வகைசெய்யும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டின் வறையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 86ஆம் மற்றும் 46ஆம் பிரிவுகளின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும், மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, மற்றும் முந்தைய வெளியீட்டிற்கு முன்பு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், 2004 ஜுலை 21ஆம் நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ/DC/8/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட பின்வரும் திருத்தம் செய்யும்

ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2(பின்னிணைப்பு) –இல் வெளியிட்டுள்ளது : –

**திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்**

**1. <u>குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :</u>**

(a) இந்த விதித்தொகுப்பு, 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான (இரண்டாம் திருத்தம்) விதித் தொகுப்பு என்று வழங்கப்பெறும்.

(b) இந்த விதித் தொகுப்பு, தமிழ்நாடு அரசிதழில் அது வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. <u>தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பின் 27ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் ,</u> –**

தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பின் 27ஆம் ஒழுங்குமுறைவிதியில் : –

(i). (1)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், மேற்சொன்ன உள்–ஒழுங்குமுறைவிதியில் மறுபடியும் ஆக்கப்பட்டவாறு, சட்டத்தின் 43ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், –

(a) தொடக்கப் பகுதியில் வரும், ‘‘மின் பகிர்மான உரிமம்தாரர் ஒவ்வொருவரும் ’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘ இந்தச் சட்டத்தில் வேறுவிதமாக வகை செய்யப்பட்டவாறல்லாமல்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) முடிவில் பின்வரும் விளக்கம் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**விளக்கம் :** இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ‘‘விண்ணப்பம்’’ என்பது, அவசியமான கட்டணச் செலுத்துகையை மற்றும் பிற இணங்குகைகளைக் காட்டுகிற ஆவணங்களுடன் சேர்த்து பகிர்மான

உரிமம்தாரரால் வேண்டுறுத்தப்படுகிறவாறு உரிய படிவத்திலுள்ளதும், அனைத்து வகைகளிலும் நிறைவான விண்ணப்பம் என்று பொருள்படும்.''

(ii). **(16)**ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிக்குப் பின்பு, பின்வரும் விளக்கம் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது : –

**விளக்கம் :** ஐயங்களை அகற்றும் பொருட்டு, மேலேயுள்ள **(1)**ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் மறுபடியும் ஆக்கப்பட்டவாறு சட்டத்தின் **43(1)**ஆம் பிரிவிற்குரிய விளக்கத்தில் வரும் ''பிற இணங்குகைகள்'' என்ற வாசகம், பின்வருவதை உள்ளடக்குதல் வேண்டும், அதாவது : –

(a) ஆர்வமுள்ள நுகர்வோரால் மின் வழங்கல் கோரப்படும் கட்டுமானம், மாற்றியமைத்தல் அல்லது கட்டிடங்கள் பழுதுபார்த்தல் அல்லது புதிய தொழிற்சாலைகள் அல்லது தொழிற்கூடங்கள் அல்லது பிற நிறுவனங்களை நிறுவுதல் குறித்து தமிழ்நாடு மாநிலத்தின் சட்டங்களில் சொல்லப்பட்டவாறு உரிய அதிகார அமைப்புகளிடமிருந்து அனுமதி அல்லது ஒப்புதலளிப்பு அல்லது ஒப்பளிப்பு அல்லது இசைவு பெறுவது தொடர்பாக அத்தகைய சட்டங்களுக்கு ஆர்வமுள்ள நுகர்வோர் இணங்கி நடத்தல் ; ''

(b) மேலேயுள்ள **(4)**, **(11)**ஆம் மற்றும் **(12)**ஆம் உள்–ஒழுங்குமுறைவிதிகளில் அடங்கியுள்ள வகைமுறைகளுக்கு ஆர்வமுள்ள நுகர்வோர் இணங்கி நடத்தல் ;

(c) உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பாணை, அல்லது ஆணை அல்லது தீர்ப்பு எதிலும் சொல்லப்பட்டுள்ள மின் வழங்கல் அல்லது பிறகோரிக்கைகள் பொறுத்து அத்தகைய தீர்ப்பாணை, அல்லது தீர்ப்பிற்கு ஆர்வமுள்ள நுகர்வோர் இணங்கி நடத்தல்.

**[தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி]**

இரா. பாலசுப்பிரமணியன்
**செயலாளர்**